1970 மார்ச் 23] [திரு. மா. முத்துசாமி]

போய்விட்டதாக முன்பு அவர்களே இந்த மன்றத்தில் சொன்னார்கள். அவர்கள் சொன்னதைத்தான் நான் திருப்பிச் சொன்னேனே தவிர, புதிதாக நான் ஒன்றும் சொல்லவில்லை. இந்தத் திட்டங்கள் ஓரளவுக்கு முடிவுற்ற நிலையில் இருப்பதால் மீண்டும் எடுத்துக் கொள்ளப்படுமானால், உரிய காலத்தில் தேர்தலை நடத்த முடியாமல் போய்விடும். முடிவுக்கு வந்துவிட்ட நிலையில், பின்னாலே மாற்ற வேண்டிய நிலை இருந்தால் பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது நிதிக் கோரிக்கைகளின் மீது வாக்கெடுப்பு நடைபெறும்.

நிதிக் கோரிக்கை 22-க்கு வெட்டுத் தீர்மானம் கொடுத்திருந்த டாக்டர் எச். வி. ஹாண்டே அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்பட்டது.

திரு. ஏ. அ. சுப்பராஜா : அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டது.

(2) நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

(ஈ) முதலமைச்சர் ஒரு துண்டு நோட்டீஸைப்பற்றி குறிப்பிடுவதற்கு பேரவைத் தலைவரின் அனுமதி பெற்றாரா என்பது குறித்து

THIRU T. MARTIN : I rise to raise a point of order under Rule 83. I will state it now.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதி 83 பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்ப உரிமை கொடுக்கிறது. எந்த விதி மீறப்பட்டிருக்கிறது என்று கூறுங்கள்.

THIRU T. MARTIN : Even before raising the point of order. . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கனவே மணி இரண்டு ஆகிவிட்டது. எந்த விதி மீறப்பட்டிருக்கிறது என்று கூறுங்கள்.

THIRU T. MARTIN : Please allow me to mention the point of order.

மாண்புமிகு உறுப்பினர் நல்லசிவம் அவர்கள், எஸ்.எஸ்.பி.யைச் சேர்ந்த அவர்கள் வெளிநடப்பு செய்திருந்தார்கள். அந்த நேரத்தில் எஸ்.எஸ்.பி. தலைவராகவும், உறுப்பினராகவும் இருக்கக் கூடிய நல்லசிவம் அவர்களைப்பற்றி மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இங்கு சொல்கிற நேரத்தில் ஒரு துண்டு நோட்டீஸை, அவர் ஏதோ தண்ணீரை தன் சொந்த நிலத்திற்கு பாய்ச்சினார் என்று அந்தக் கிராமத்திலுள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் அடித்த நோட்டீஸ் என்ற ஒரு நோட்டீஸை இங்கு ரெஃபர் செய்து அதன் கன்டென்ட்ஸை சொன்னார்கள். நான் வேண்டுவதெல்லாம். முதல் அமைச்சர் அவர்கள் இங்கு அந்தத் துண்டு நோட்டீஸை, பற்றிச் சொல்வதற்கு முன்பு தங்களிடம் அனுமதி பெற்று அதைச் சொன்னார்களா அல்லது அதை . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையில் அறிக்கை வைக்கும் முறையில் சொல்லவில்லை. ஆகவே தலைவரின் அனுமதியைப் பெற வேண்டிய தேவை இல்லை. இப்படியெல்லாம் கூறப்படுகிறது என்று சொன்னார்களே தவிர அது அவையில் வைக்கப்பட்ட நோட்டீஸ் அல்ல. அவையில் வைக்கப்படவேண்டும் என்ற முறையில் இருந்தால்தான் தலைவரின் அனுமதியைப் பெறவேண்டும்.

(7) 1970–71-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"நிதிக் கோரிக்கை எண் 22—கதர் என்ற தலைப்பின்கீழ் ரூ. 18,11,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 23-க்கு வெட்டுத் தீர்மானம் கொடுத்திருந்த டாக்டர் எச். வி. ஹாண்டே அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்பட்டது.

திரு. இல. பலராமன், திரு. கே. போஜன், திருமதி கே. பி. ஜானகியம்மாள், திரு. ஏ. அ. சுப்பராஜா ஆகியோரின் வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"நிதிக் கோரிக்கை எண் 23—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின்கீழ் ரூ. 6,04,88,600-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 29-க்கு வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருந்த திரு. ஏ. அ. சுப்பராஜா, திரு. க. இராமமூர்த்தி, திரு. சோ. அழகர்சாமி, திரு. பி. எஸ். தனுஷ்கோடி, ஆகியோரின் வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

டாக்டர் எச். வி. ஹாண்டே அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்பட்டது.